20.2.2009 நாளிட்ட தமிழ்நாடு
அரசிதழ் சிறப்பு வெளியீட்டில்
வெளியிடப்பட வேண்டியது

**<u>சுருக்கம்</u>**

**ஆட்சி எல்லை – கோயம்புத்தூர் மாவட்டம் – பல்லடம் வட்டத்தைச் சீரமைத்து சூலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**வருவாய் (வ.நி.1(1)துறை**

**<u>அரசாணை (நிலை) எண்: 72</u>** **<u>நாள். 20.2.2009</u>**

**<u>படிக்க:</u>**

1. அரசாணை நிலை எண்.279, வருவாய்த்துறை நாள் 9.6.2003.
2. அரசாணை (நிலை) எண். 617, வருவாய்த்துறை நாள். 24.10.2008.
3. கோயம்புத்தூர் மாவட்டாட்சியர் கடித எண். ந.க.எண்.அ1/46316/2008 நாள் 17.12.2008.
4. கூடுதல் ஆணையர், வருவாய் நிர்வாகம் கடித எண். பணி.6(4)/91870/2008 நாள் 16.2.2009.

-----

<u>ஆணை:–</u>

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டு புதிய திருப்பூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. அவ்வாணையில் கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டம் திருப்பூர் மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டது. பல்லடம் வட்டத்திலிருந்து சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி சூலூர் வட்டம் உருவாக்கி அதனை கோயம்புத்தூர் கோட்டத்துடன் இணைக்கலாம் என ஆணை வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் சூலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைப்பது குறித்து கூடுதல் ஆணையர் வருவாய் நிர்வாகம் அவர்களின் விரிவான அறிக்கை பெறப்பட்டது.

2. கூடுதல் ஆணையர் வருவாய் நிர்வாகம் அவர்களின் அறிக்கையினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்தது. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் புதிய வட்டம் அமைக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல்கள் பூர்த்தி செய்துள்ளதால் கோயம்புத்தூர் மாவட்டம் தற்போதைய பல்லடம் வட்டத்திலிருந்து சில வருவாய் கிராமங்களைப் பிரித்து, சூலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய சூலூர் வட்டத்தை உருவாக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் சூலூர் வட்டம் 22.2.2009 முதல் செயல்படும். சீரமைப்பிற்குப் பின் இந்த இரு வட்டங்களும் பின்வருமாறு அமையும்:–

| வட்டம் | உள்வட்டம் |
|---|---|
| பல்லடம் | 1. பல்லடம் |
| | 2. சாமளாபுரம் |
| | 3. கரடிவாவி |
| | 4. பொங்கலூர் |
| சூலூர் | 1. கருமத்தம்பட்டி |
| | 2. சூலூர் |
| | 3. செலக்கரிச்சல் |
| | 4. வாரப்பட்டி |

3. இந்த ஆணையின் இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள அறிவிக்கை 20.2.2009 நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு இதழில் வெளியிடப்படும்.

4. புதிய சூலூர் வட்டத்திற்கு இந்த ஆணையின் இணைப்பு–2 குறிப்பிட்டுள்ளவாறு 28 பணியிடங்கள் வழங்கப்படுகிறது. அதில் 10 புதிய பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள், தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். மேலும் இணைப்பு–2ல் குறிப்பிட்டுள்ளவாறு பல்லடம் வட்டத்திலிருந்து புதிய சூலூர் வட்டத்திற்கு மறு பணி பரவலமர்த்தல் (Redeployment) மூலம் மாற்றப்படும் 18 பணியாளர்கள் உடனடியாக புதிய வட்டத்தில் பணி ஏற்பர். அவர்களுடன், தளவாடம் மற்றும் இதரப் பொருட்களும் மாற்றப்பட வேண்டும். பல்லடம் வட்டத்தில் உபரியாக உள்ள 8 அலுவலக உதவியாளர் பணியிடங்களில் 6 பணியிடங்கள் ரத்து செய்தும், 2 பணியிடங்களை திருப்பூர் மாவட்டத்திற்கு அரசாணை நிலை எண்.70, வருவாய்த்துறை, நாள். 19.2.2009 இல் புதிதாக தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ள 2 அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு பதிலாக மறு பணி பரவலமர்த்தல் மூலம் பணியமர்த்தப்படுகிறது.

5. புதிய சூலூர் வட்டத்திற்கு இரண்டு ஈப்புகள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.10,50,000/–வழங்கப்படுகிறது. இதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் தொடரும் எரிபொருள் செலவினமாக ரூ.90,000/–க்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

6. புதிய சூலூர் வட்டத்திற்கு மரத் தளவாடங்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.2,00,,000/–க்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

7. எதிர்பாரா ஆரம்ப செலவினமாக (Start-up Expenditure) மிதிவண்டி, சுவர்கடிகாரம், பணப்பெட்டி முதலான வாங்குவதற்கு ரூ.10,000/–க்கும் சில்லரை செலவினமாக ரூ.10,000/–க்கும் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

8. பின்வரும் அலுவலகப் பொருட்களை, புதிய சூலூர் வட்டத்திற்கு இலவசமாக வழங்குமாறு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

| | | |
|---|---|---|
| (i) மின்சாரத்தால் இயங்கும் படிப் பெருக்கி இயந்திரம் | : | 1 |
| (ii)எண் குறியீடு இயந்திரம் | : | 1 |
| (iii) எழுதுபொருட்கள், தேவைப்படும் படிவங்கள் மற்றும் அரசிதழ்கள் | : | தேவையானவை |
| (IV) உலோக சீல் (முத்திரை) | : | 1 |
| (V) ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரம் | : | 1 |

9. சூலூர் வட்ட அலுவலகத்திற்காக புதிய கட்டிடம் கட்டப்படும் வரை, அலுவலக வாடகையாக ஆண்டொன்றிற்கு ரூ.1,44,000/– ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

10. சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, நீட்டிப்புடன் (With Extension) கூடிய ஒரு தொலைபேசியும், வட்டாட்சியரின் இருப்பிடத்திற்கு ஒரு தொலைபேசியும் அமைப்பதற்கு, தொடரா செலவினமாக ரூ.6,000/– மற்றும் ஆண்டொன்றிற்கு ஆகும் தொலைபேசிக் கட்டணம் ரூ.30,000/– க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

11. சூலூர் அலுவலகத்திற்கு கணினி வாங்க ரூ.50,000/– ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

12. மேலே வழங்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்புகள் தொடர்பாக உடன் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதன்மை செயலாளர் மற்றும் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

13. மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:–

(அ) <u>பணியாளர் நியமனம் : –</u>

" 2053.00 – மாவட்ட நிருவாகம் –094 ஏனைய பணியாளரமைப்பு – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "

(து.தொ.கு. 2053 00 094 AB 0102)

<u>குடிமைப் பொருள் பிரிவுக்காக அலுவலர் நியமன செலவினம்:–</u>

"3456 00 –குடிமைப் பொருள் – 001. நெறிப்படுத்துதலும், நிர்வாகமும் – I - திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01. சம்பளங்கள் "

(து.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) <u>தொலைபேசி :– ரூ.36,000/–</u>

"05 அலுவலக செலவுகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள்" (து.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) <u>சில்லரைச் செலவினம்/ சுவர் கடிகாரம் முதலியன :– ரூ.20,000/–</u>

"05 அலுவலக செலவுகள் – 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(து.தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) <u>அறைகலன்கள்:– ரூ.2,00,000/–</u>

" 05 அலுவலக செலவுகள் – 05 அறைகலன்"

(து.தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) <u>ஈப்பு :–ரூ.10,50,000/–</u>

" 21 மோட்டார் வண்டிகள் – 01 வாங்குதல்"

(து.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஊ) <u>கட்டிடவாடகை:–:ரூ.1,44,000/–</u>

" 06 வாடகை கட்டணம் மற்றும் வரிகள் 01 வாடகை"

(து.தொ.கு.2053 00 094 AB 0611)

(எ) <u>எரிபொருள் செலவினம் :– ரூ.90,000/–</u>

" 45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்"

(து.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஏ) <u>கணினி வழங்குதல்:–ரூ.50,000/–</u>

" 76 கணினியும் துணைப் பாகங்களும் 01 வாங்குதல்"

(து.தொ.கு. 2053 00 094 AB 7614 )

**14.** இந்த ஆணையில் கண்டுள்ள தொகைகளைப் பெற்று வழங்குவதற்கு, கோயம்புத்தூர் மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. வட்ட அலுவலகத்திலிருந்து பெறப்படும் பணப் பட்டியல்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கோயம்புத்தூர் மாவட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் புது துணைப் பணிகள் குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த்துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன் பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**15.** இந்த ஆணை நிதித் துறை அலுவல் சார்பற்ற எண்.40/DS(KA) நிதி(வருவாய்)/2009, நாள்.20.2.2009 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1737 (ஆயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு)இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி/**

**கே. தீனபந்து**

அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை –79. (20.2.2009 நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மை ஆணையர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை5.
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை–5.
கருவூலத் துறை இயக்குநர், சென்னை–35.
மாவட்டாட்சியர், கோயம்புத்தூர்/திருப்பூர்
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–18
சம்பள கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை–5.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை சென்னை–2.
அனைத்து துறை தலைவர்கள்.
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9./ இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறை, பெசண்ட் நகர், சென்னை –92.
பொது (தேர்தல்) துறை, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9
செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துறை, சென்னை–9.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–35.
நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை செயலலளரின் நேர்முக உதவியாளர்,சென்னை–9.
நிதி (வருவாய்)/வ.செ.பொ.II/வ.செ.ஒ.துறை, சென்னை–9.
வருவாய்த்துறை, (அனைத்துப் பிரிவுகள்) சென்னை–9. (துக்க தொடர் மேல் நடவடிக்கைக்காக).

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ந. சுப்ரமணியன்)
அரசு சார்புச் செயலாளர்

<u>இணைப்பு–1</u>

<u>அறிவிக்கை</u>

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் வட்டத்தைப் பிரித்து, 2009ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து சூலூாரைத் தலைமையிடமாகக் கொண்டு சூலூர் வட்டமொன்று, கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிய சூலூர் வட்டத்தில் உள்ளடங்கும் 1. கருமத்தம்பட்டி, 2. சூலூர், 3. செலக்கரிச்சல், 4. வாரப்பட்டி ஆகிய குறுவட்டங்கள் மீது, தற்போது பல்லடம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள், இனி சூலூர் வட்டாட்சியரால் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

| வ.எண். | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் பெயர் |
|---|---|---|
| 1. | கருமத்தம்பட்டி | பதுவம்பள்ளி<br>காடுவெட்டிபாளையம்<br>மோப்பிரிபாளையம்<br>கிட்டாம்பாளையம்<br>கருமத்தம்பட்டி<br>செம்மாண்டம்பாளையம்<br>கரவழிமாதப்பூர்<br>கணியூர்<br>அரசூர்<br>நீலம்பூர்<br>மைலம்பட்டி |
| 2. | சூலூார் | ராசிபாளையம்<br>இருகூர்<br>ஒட்டர்பாளையம்<br>பட்டணம்<br>பீடம்பள்ளி<br>கண்ணம்பாளையம்<br>கலங்கல்<br>காங்கேயம்பாளையம்<br>சூலூார்<br>காடாம்பாடி |
| 3. | செலக்கரிச்சல் | அப்பநாயக்கன்பட்டி<br>பாப்பம்பட்டி<br>இடையர்பாளையம்<br>கள்ளப்பாளையம்<br>பச்சாபாளையம்<br>போகம்பட்டி<br>வடவள்ளி<br>செலக்கரிச்சல்<br>பூராண்டம்பாளையம் |
| 4. | வாரப்பட்டி | வதம்பச்சேரி<br>வாரப்பட்டி<br>மலைப்பாளையம்<br>குமாரபாளையம்<br>வடவேடம்பட்டி<br>எஸ்.அய்யம்பாளையம்<br>கம்மாளப்பட்டி<br>ஜல்லிப்பட்டி<br>செஞ்சேரிப்புத்தூர்<br>தாளக்கரை<br>ஜே.கிருஷ்ணாபுரம் |

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

**பிரிவு அலுவலர்**

இணைப்பு **–2**
சூலூர் வட்ட பணியாளர் விவரம்

| வ. எண். (1) | பணியிடப் பெயர் (2) | அரசு நிர்ணயித்து உள்ள அளவுகளின் படி (3 – 6 உள் வட்டம்) (3) | தற்போது உள்ள பல்லடம் வட்டத்தில் பணியாளர் களின் எண்ணிக்கை (4) | பல்லடம் வட்டத்தில் நிறுத்திக் கொள்ளப்படும் பணியிடங்கள் (5) | பல்லடம் வட்டத்தில் இருந்து சூலூர் வட்டத்திற்கு மாறுதல் செய்யும் பணியிடங்கள் (6) | சூலூர் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கப் படும் புதிய பணியிடங்கள் (7) | சூலூர் வட்டத்திற்கு அனுமதிக்கப் படும் மொத்த பணியிடங்கள் (8) | உபரியாக உள்ள ரத்து செய்யப்படும் பணி இடங்கள் (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் பிரிவு | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 2 | தனி வட்டாட்சியர் (ச.பா.தி) | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 3 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 4 | மண்டல துணை வட்டாட்சியர் | 1 | 2 | 1 | 1 | -- | 1 | -- |
| 5 | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 10 | 19 | 10 | 9 | 1 | 10 | -- |
| 6 | இளநிலை உதவியாளர் | 4 | 7 | 4 | 3 | 1 | 4 | -- |
| 7 | தட்டச்சர் | 1 | 2 | 1 | 1 | -- | 1 | -- |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 9 | பதிவரை எழுத்தர் | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | -- |
| 10 | அலுவலக உதவியாளர் | 7 | 14 | 3 | 3 | -- | 3 | 8* |
| 11 | மசால்சி | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 12. | இரவு காவலர் | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| | மொத்தம் (1) | 30 | 51 | 26 | 17 | 9 | 26 | 8* |
| | வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | |
| 13. | வட்ட வழங்கல் அலுவலர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 14 | தனி வருவாய் ஆய்வாளர் | 1 | 2 | 1 | 1 | -- | 1 | -- |
| | மொத்தம் (2) | 2 | 3 | 2 | 1 | 1 | 2 | -- |
| | மொத்தம் (1,2) | 32 | 54 | 28 | 18 | 10 | 28 | 8* |

- **8 பணியிடங்களில் 6 பணியிடங்கள் ரத்து செய்தும் 2 பணியிடங்களை திருப்பூர் மாவட்டத்திற்கு புதிதாக தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு பதிலாக மறு பணி பரவலமர்த்தல் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.**

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்